Registered No. M. 2330.

" SIDDHANTHAM "
Vol. 15—No. 5

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# சித்தாந்தம்

சைவசித்தாந்த மகாசமாஜத் திங்கள் வெளியீடு

"எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே"



| | | |
|---|---|---|
| மலர் 15 | சித்திரபானு ஆண்டு வைகாசித் திங்கள்<br>1942ஆ மேமீ | இதழ் 5 |



8 - JUN 1942
MADRAS

உள்ளுறை பக்கம்


தமிழ்த்தாயின் தவப் புதல்வர் ... 209

சீவக சிந்தாமணியும் சைவமும் ... 211

திருவாரூரர் ... 260


பத்திராசிரியர் : திரு. வி. உலகநாத முதலியார்

சித்தாந்த மகாசமாஜம்
செல்லுக்காரத் தெரு, மயிலாப்பூர், சென்னை.

1942 தனிப் பிரதி அணா 4.

# ஞானியார் சுவாமிகள் நினைவு நிதி

ஸ்ரீலஸ்ரீ ஞானியார் சுவாமிகளுடைய நினைவு நிதிக்குக் கீழே குறித்துள்ள அன்பர்கள் பொருளுதவி புரிந்துள்ளார்கள். ஏனைய அன்பர்களும் விரைவில் தாங்கள் விரும்பிக் கொடுக்கக் கருதும் பொருளை விரைவில் கொடுத்து உதவி புரியுமாறு வேண்டுகிறேன்.

| திருமிகு | | ரூ. | அ. |
|---|---|---|---|
| க. அரங்கசுவாமி முதலியாரவர்கள் | ... | 108 | 0 |
| அ. கு. காமாக்ஷியம்மையாரவர்கள் | ... | 100 | 0 |
| மயிலைகிழார் இளமுருகனாரவர்கள் | ... | 100 | 0 |
| திவான்பகதூர். டி. எம். நாராயணசாமி பிள்ளையவர்கள் | | 50 | 0 |
| ராவ்பகதூர். சி. எம். இராமச்சந்திரஞ் செட்டியாரவர்கள் | | 50 | 0 |
| ராவ்சாஹிப்-எஸ். வையாபுரிப் பிள்ளையவர்கள் | ... | 50 | 0 |
| ச. சச்சிதாநந்தம் பிள்ளையவர்கள் | ... | 25 | 0 |
| மு. அருணாசலம் பிள்ளையவர்கள் | ... | 20 | 0 |
| தெ. பழ. சித. சதாசிவம் செட்டியாரவர்கள் | ... | 16 | 0 |
| தி. க. சுந்தரம் பிள்ளையவர்கள் | ... | 10 | 0 |
| கா. இராமநாதன் செட்டியாரவர்கள் | ... | 6 | 4 |
| கொழும்பு அருள் தியாகராசா அவர்கள் | ... | 5 | 0 |
| என். எஸ். இரத்தினசபாபதி செட்டியாரவர்கள் | ... | 5 | 0 |
| K. A. சிவஞானம் பிள்ளை அவர்கள், வழக்கறிஞர், அம்பாள்சமுத்திரம் | ... | 5 | 0 |
| | ஆக | 550 | 4 |

ம. பாலசுப்பிரமணியன்,
காரியதரிசி.

---

## தமிழ் ஆண்டுப் பிறப்புச் சொற்பொழிவு

நமது சமாஜ உதவித் தலைவர் - ராவ்பகதூர் - C. M. இராமச்சந்திரஞ் செட்டியார் அவர்கள், சித்திரபானு ஆண்டு 1உ (13-4-42) சமாஜத்தின் சார்பாகச் சென்னை இராயப்பேட்டை "குகானந்த நிலையத்"தில் "நால்வர் நல்வழி" என்னும் பொருள்பற்றிப் பல அரிய கருத்துக்களை எடுத்து விரித்துரைத்தார்கள்.

Reg. M. 2330

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபோ னம்பலவன்
ஞானதரு வாணியையுள் நாடு.

மலர் 15 | சித்திரபானு ஆண்டு வைகாசித் திங்கள் 1942௵ மேமீ | இதழ் 5

## தமிழ்த்தாயின் தவப் புதல்வர்

[பத்திராசிரியர்]

பிரிந்தார்! தமிழ்த் தாயின் தவப் புதல்வர் மஹாமஹோபாத்தியாய Dr. உ. வே. சாமிநாத ஐயர் அவர்கள் நம்மை விட்டுப் பிரிந்தார்கள். திருக்கழுக் குன்றத்து உச்சியானோடு இரண்டறக் கலந்தாரேனும், அச்சேதி கேட்ட தமிழர் ஆராத் துயரத்தி லழுந்தினர். என்னே! என்னே! மாபெருந் தமிழரின் மறைவு. திரு. ஐயர் அவர்கள் சங்க நூல்களென்னும் அமிழ்தக் கடலில் மூழ்கித் திளைத்தவர்கள். எந்நேரத்திலும் ஏடுங் கையுமாயிருந்த எழிலினையும், காம்பினோடு நேத்திரங்கள் அணிந்து நூலாராயும் பார்வையையும், ஆழ்ந்தாழ்ந்து சிந்திக்கும் அமைவுறு மனத்தின் தன்மையையும், கற்றோரைக் கண்டபோதெல்லாம்

கனிந்த மொழிகள் பல பகரும் புன்னகை கொண்ட திருவாயையும், பன்னூல் பதிப்புக்குத் தம் மாணவர் சூழ வேலை வாங்கும் அன்பின் திறத்தினையும் எண்ணுந் தோறும் திரு. ஐயர் அவர்கள் என்றும் நங்கண்முன் அமர்ந்திருப்பவர் போலன்றோ கருதப்படுவார்கள்.

சிறைப்பட்டுக்கிடந்த எங்களை எல்லா வகையாலும் அணிபெறச் செய்து தமிழ்நாட்டில் உலவ வைத்த ஐயரே! "எங்களை விட்டு எங்ஙனம் மறைந்தீர்; எங்ஙனம் மறந்தீர்" என்று சங்க நூல்களும் பிறவும் கண்ணீர் உகுத்தன.

சங்க நூல்களையும், இன்னும் பல காப்பியங்களையும் ஆராய்வோர்க்குத் திரு. ஐயர் அவர்கள் தாம் பதித்த நூல்களில் சேர்த்துள்ள ஆராய்ச்சி அரும்பதக் குறிப்புரைகள் பெருந்துணை புரியும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

சைவ வேளாள குல திலகரும், சங்கநூற் கடலும், கவி அரசருமாகிய மகா வித்துவான் மீனாட்சி சுந்தரனார் மாணவரில் வல்லார் பலரிருந்தும், தமிழ்த் தாய்க்குத் தனிப்பெருந் தொண்டாற்ற முற்பட்ட செல்வ மாணவர் ஐயரே என்று கூறுவது மிகையாகாது. பல மாநாடுகளிலும், ஆண்டு விழாக் கூட்டங்களிலும் தலைமை தாங்கி முன்னுரை பின்னுரை வழங்கும் காலத்துத் திரு. ஐயர் எடுத்துரைக்கும் அற உரைகளையும், சொற்களைப் பிரித்துப் பொருட் செறிவுடனும் இன்பச் சுவையுடனும் மொழியும் ஆற்றலையும் கேட்ட கூர்த்த மதியினர் வியப்படைந்து பாராட்டுவர்.

இவ்வந்தணராய அறவோர் தமிழ் நாட்டில் உள்ள திருவாவடுதுறை, திருப்பனந்தாள் முதலிய மடாதிபதிகளிடத்துப் பேரன்பு வாய்க்கப்பெற்றவர். அவர்க[illegible]ட்டவர். அவர்கள் துணை

கொண்டு பதித்த நூல்களும் உள. திரு. ஐயர் அவர்கள் சைவ சமயப்பற்று மிகுதியும் உடையவர். சைவத் திருமுறைகளை ஓதுபவர். இன்னிசையுடன் ஓதக் கேட்டு மகிழ்பவர். சிவாலய வழிபாட்டிலும் ஈடுபட்ட வர். தாம் வதிந்த திருவட்டீச்சுரன் பேட்டைக்கு அணித்தாயுள்ள திருவான்மியூர் முதலிய கூட்டமில்லாத ஆலயங்களிற் சென்று தனியாக அமர்ந்து அக்கமாலை கொண்டு மந்திரமோதும் கடப்பாடுடையார். பண்டை வாழ்க்கை நெறி பிறழாதவர்.

இத்தகைய பெருமையெல்லாம் ஒருங்கே வாய்க்கப் பெற்ற மஹாமஹோபாத்தியாய Dr. உ. வே. சாமிநாத ஐயர் அவர்கள் வரலாறு "ஆனந்த விகட"னில் அணி பெறக் காட்சியளித்து வருகிறது. திரு. ஐயர் அவர்கள் செய்துவந்த தமிழ்த் தொண்டு அவரது கான்முளை வழியாகவும் மாணவர் வழியாகவும் பெருகக்கடவதாக.

# சீவகசிந்தாமணியும் சைவமும்

[திரு. ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை]

(மலர் - 15 ; இதழ் - 4; 208 - ம் பக்கத் தொடர்ச்சி)

இவர் காலத்தே, திருஞானசம்பந்தர் முதலிய சைவத் திருவருட் செல்வர்களால் சீர் செய்யப்பெற்ற சைவ சமயம் சிறப்புற்றிருந்தது. சமண சமயம் தலைமையிழந்திருந்தது. திருஞானசம்பந்தர் முதலியோரால் நிலைநாட்டப் பெற்ற வைதிக சைவம், வேதநெறி பற்றிய புராணங்களையே அடிப் படையாகக் கொண்டிருந்தது. "வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறைவிளங்க" என்றும், "வேதப் பயனும்

சைவமும்போல்" என்றும், தேவர்க்குச் சுமார் இருநூறு ஆண்டுகட்குப் பிற்போந்த சேக்கிழார் பெருமான் எடுத்தோதுதலால் இவ்வுண்மை புலனாகின்றது, ஆகவே, தேவர் இச்சிந்தாமணியைப் பாடிய காலத்தில், நம் தமிழ் நாட்டில் நிலவிய சைவநெறி வைதிக சைவப் புராணங்களைக் கொண்டிருந்தமை இனிது விளங்கும்; அன்றியும் எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, பதினெண் கீழ்க்கணக்கு என வகுத்துக் காணப்பெறும் சங்க இலக்கியங்களும் தமிழர் கற்கும் தமிழ்க் கல்விக்குப் பெருநூல்களாகத் திகழ்ந்தன. தேவரும், இவ்வைதிகச் சைவ நூல்களையும், செந்தமிழ்ச் சங்க இலக்கியங்களையும், திருஞானசம்பந்தர் முதலியோர் பாடியருளிய திருமுறைகளையும் நன்கு கற்று மிக்க சொல்வளம் படைத்த தமிழ்ப் பாவலரால் விளக்கமுற்றிருந்தார். இவர் பாடிய இப்பெருங் காவியத்தில், வைதிக சைவப் புராணக் கருத்துக்கள் பல ஆங்காங்கு நின்று மிளிர்கின்றன. இதனால், இவர் இயற்றிய சிந்தாமணி நந்தாவளம் பெற்று, சமய வேற்றுமையின்றித் தமிழர்களால் போற்றிப் படிக்கப்பெறுவதாயிற்று; இன்றும் அவ்வண்ணமே வந்துகொண்டிருக்கிறது. இந்நூலுக்கு ஓர் அரிய உரையும் நச்சினார்க்கினியார் என்னும் வைதிக சைவர் ஒருவரால் எழுதப்பெற்றுள்ளது.

சமயப்போர் என்னும் சூறுவளியால் நிலைகலக்குண்ட சமயமொன்றைச் சார்ந்த பாவலர் ஒருவர், ஒரு காவியம்செய்வரேல், அவரது அக்காவியத்தின்கண் காவிய நலம் ஒன்றே சிறந்துநிற்கும் என்பது சிறப்பன்று; அவர் உள்ளத்தே தம் சமயத்தைப் பண்டை நிலையில் நிறுத்த வேண்டுமென்னும் ஆர்வமும், அது வாய்ப்பது குறித்து ஒல்லும் வாயெல்லாம் தம் சமயக் கருத்துக்களை நாட்டு மக்களிடையே பரப்ப வேண்டுமென்ற வேட்கையும் உள்ளுறக்கிடந்து தன் கடமையினைச் செய்யுமென்பது இயற்கையாகும். இதனை ஆராய்ச்சியறிவுடையவர் எவரும் உடன் படுவர். தேவர்

வாழ்ந்த காலமும், அக்காலத்தே அவரது சமயமிருந்த நிலையும் நோக்குமிடத்து, அவர் பாடிய காவியத்தில், காவிய நலமும் சமண் சமயக் கருத்தும் ஒருங்கே விரவிவரப் பாடியிருப்பர் என்பது இனிது உணரப்படும். இவர் மேற்கொண்ட நெறியே இவர்க்குப் பின்வந்த சமண முனிவர்களின் தமிழ் நூல்களில் அமைந்து கிடக்கின்றது.

அன்றியும், இச் சிந்தாமணிக்கண் ஏறக்குறைய 3100 செய்யுட்கள் உள்ளன. இவற்றுள் சில கந்தியார் பாடியன என்பர் ; ஆனால் அவை இன்னவென அறியக்கூடவில்லை ; ஆகவே, இப்போது காணப் பெறுவன 3100 செய்யுட்கள் என்றே கொள்வோம். இவற்றுள், கடவுள் வாழ்த்து, பதிகம் என்ற இரண்டினையும் ஒரு பகுதியாகக் கொள்ளின், இக்காவியம் பதினான்கு பகுதியதாகும். இவைகளுள், இறுதியில் உள்ள முத்தியிலம்பகம் நீங்கலாக, ஏனைய பதின்மூன்றுக்கும் சராசரி 200 செய்யுட்கள் உள்ளன ; முத்தியிலம்பகத்தில் மாத்திரம் 500 செய்யுட்கள் இருக்கின்றன. இம் முத்தியிலம்பகம் மட்டில் ஐந்நூறு செய்யுட்கள் கொண்டிருப்பதற்குக் காரணம், இப்பகுதி முற்றும் சமண் சமயக் கருத்துக்களைத் தமிழ் நாட்டவர்க்கு எடுத்து உரைப்பதேயாகும். மேலும், இச்சீவக சிந்தாமணி சைனரிடையே ஒரு சமயப் பெரு நூலாகவே போற்றப்பட்டு வருகின்றது. முத்தியிலம்பகத்தை மட்டில் தனியே பிரதிசெய்து கொண்டு ஓதியும் வழிபட்டும் வரும் வழக்கம் சைனர்பால் இன்றும் உண்டு. இவ்வாறு வழிபடப்பட்டுவந்த முத்தியிலம்பக ஏட்டுப்பிரதிகள் அடியேன்பால் இரண்டு உண்டு ; அவற்றுள் ஒன்று ஆம்பூர் "தமிழணங்கு" ஆசிரியர், உயர்திரு. ஆ. ம. சிவஞானம் அவர்கள் வழங்கியது. தென்னார்க்காடு ஜில்லாவைச் சேர்ந்த வீடூர், ஆலக்கிராமம், பெருமண்டூர், விழுக்கம், சிற்றூர் முதலிய இடங்களில், பல சைனர் வீடுகளில் இம்முத்தியிலம்பகப் பகுதி மட்டில் தனியே இருக்கக் கண்டிருக்கின்றேன்.

இக்கூறியவாற்ருல், திருத்தக்கதேவர், தாம்பாடிய இச் சிந்தாமணிக் காவியத்தில், காவிய நலமும், சமண்சமயப் பொருள் நலமும் சிறக்க அமைப்பதை ஒரு நோக்கமாகக் கொண்டிருந்தனரென்பது துணிபாம்.

இவ்வாறு இவர் சமண் சமயப் பொருளைத் தமிழ் உலகிற்கு வழங்கும் கருத்தினராதலைப் பண்டையறிஞர் அறியாமல் இல்லை. எனினும், இக்காவியத்தின் தமிழ்நலத்தைத் தேர்ந்து இன்புற்ற சிறப்பால், இதனை அவர்கள் புறக்கணிக்கவில்லை. பின்வந்த யாப்பருங்கலம், நேமிநாதம், நன்னூல் முதலாயினவும் இவ்வாறே தமிழறிஞர்களால் இன்றுகாறும் போற்றப்பட்டு வருகின்றன. ஆறுமுக நாவலர் முதலிய சைவவொழுக்கம் தலைசிறந்த சான்ருேர் உரைவகுத்தும் அச்சிட்டும் வெளியிட்டுமுள்ளார். வைத்தியநாத தேசிகர் என்னும் சீரிய சைவச் சான்ருேர் எழுதிய இலக்கண விளக்கத்தை மறுத்து, சமண முனிவரான பவணந்தியார் எழுதிய நன்னூலை வலியுறுத்தியவர் யாம் செய்த தவப்பயனாய்த் தோன்றி, அருமைச் சிவஞான போதத்துக்குப் பேருரை விரித்த பெருந்தகை மாதவச் சிவஞான யோகிகளாவர். "எப்பொருள் யார்யார் வாய்கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு" என்ற மெய்ம் மறையின் துணிபுதோய்ந்த உள்ளத்தராதலின், அவர்பால் சமயக் காழ்ப்பு அக்காலத்தே இலதாயிற்று.

அன்றியும், வெள்ளறிவுடைய மக்கள் உள்ளத்தை எளிதிற் பற்றி யீர்க்கும் எளிய நூல்கள் அக்காலத்தே சைவ வுலகில் அருமையாய் இருந்திருத்தல் வேண்டும். சங்க இலக்கியம், தேவாரத் திருமுறை, திருமந்திரம் முதலியன அக்காலத்தே இருந்தனவாயினும், நுண்மாண் புலமையுடையார்க்கன்றி ஏனையோர்க்கு - அவருள்ளும் இறைவன் திருவருள் நலம் வாயாதார்க்கு - எளிதிற் பொருள் விளங்காவாய் இருந்தன. இவ்விடர்ப்பாடு நம் திருநாவுக்கரசர் காலத்தேயே இருந்திருக்கின்றதென்று அவர் வழ

லாறு கூறுகின்றது. அவர் காலத்தே திருமந்திரம் முதலிய சமய நூல்கள் இல்லாமல் இல்லை. நாவரசர்க்குத் திருவருள் நன்கு வாய்ப்பதற்கு முன்பு, அவர் சமண் சமய நூல்களையே மிகக் கற்றனரென்று அவர் வரலாறு கூறுகின்றது :

" நில்லாத உலகியல்புகண்டு நிலையா வாழ்க்கை
அல்லேன் என்றறத் துணிந்து சமயங்க ளானவற்றின்
நல்லாறு தெரிந்துணர்ந்தும் நம்பர் அருளாமையினால்
கொல்லாமை மறைந்துறையும் அமண்சமயம் குறுகினார் "

என்று சேக்கிழார் பெருமான் கூறுதல் காண்க. இதனை நோக்கின், தொடக்கத்தில் மருள்நீக்கியாய் இருந்தவரைத் தன்பால்கொண்டு, தருமசேனராக்கி, முடிவில், நாவுக்கரசாய், அப்பமூர்த்தியாய், தாண்டக வேந்தராய், சைவ சமயாசிரியராய் நமக்கு வழங்கியது, திருவருள் என்பது ஒருபுறமிருக்க, இச்சமண் சமயப்பெருநூல் தொகுதியுமாம் என்பது பொருந்தா உரையன்றும். எனவே, இச்சீவக சிந்தாமணியென்னும் செந்தமிழ்ப் பெருநூல் சமண் சமயப் பெரு நூலாயினும், சைவர்களாகிய நாம் மேற்கொண்டு போற்றுதற்கும், நம்மைப்போல் பிறரும் போற்றுமாறு அச்சிட்டு வெளியிடுதற்கும் மிக்க உரிமையுடையோம் என்பது தெள்ளிதாம்.

இனி, " ஒள்ளிய சீர்த்தொண்டர் புராணம் " என்றும், " பொருவரிய திருத்தொண்டர் புராணம் ", " சங்கரன் தாள் தமது சிரங்கொள் திருத்தொண்டர் புராணம் ", " சேண்தகைய திருத்தொண்டர் புராணம் " என்றும் நாம் பரவிப் படித்து ஓதி இன்புறும் பெரிய புராணம் பிறந்ததற்கும் இச்சீவக சிந்தாமணி ஒரு காரணமாம் என்பதனைத் திருத்தொண்டர் புராண வரலாறு உரைத்தருளிய உமாபதி சிவனார் விளம்புகின்றார்கள். சேக்கிழார் பெருமான் திருத்தொண்டர் புராணம் பாடிய காலத்தில் இருந்த

சோழன் கி. பி. 1132 முதல் 1146 வரை ஆட்சி செலுத்திய இரண்டாங் குலோத்துங்கன் என்பர். இவ்வேந்தன் பரந்த மனப்பண்புடையவன் என்றும், சிறந்த சிவத்தொண்டன் என்றும் ஏனைச் சமயத்தவரையும் இனிது ஆதரிக்கும் விரிந்த நோக்குடையவன் என்றும் ஆராய்ச்சியாளர் விதந் தோதுகின்றனர். இவன் இச்சீவக சிந்தாமணியின் நந்தாத் தமிழ் நலங்கண்டு அதனையே பெரிதும் விரும்பி எப்போதும் ஓதியும் உரைப்பக் கேட்டும் இன்புற்றிருந்தான். இச் சிந்தாமணிக்கண் இடையிடையே கொளுத்தப்பெறும் சமண சமயக் கருத்துக்களை அரசன் ஏற்றுச் சமணனாய் விடுவனோ என்று சேக்கிழார் பெருமான் முதலிய சான் றோர் அறிந்து அஞ்சி, அவன் கருத்துச் சிவநெறியிலேயே ஊன்றி நிற்றல்வேண்டித் திருத்தொண்டர் புராணத்தைச் செய்தருளினர் என்று உமாபதிசிவனாரும், மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களும் பிறரும் பலவகையாலும் எடுத்தோதியுள்ளார்கள்.

சிந்தாமணியின் காவிய நலத்திலே சோழ வேந்தன் கருத்துத் தோய்ந்து நின்றதை, "வளவனும்...சிந்தாமணிக் கதையை மெய்யென்று வரிசைகூற, உளமகிழ்ந்து பலபடப் பாராட்டிக் கேட்க உபயகுல மணிவிளக்காம் சேக்கிழார் கண்டு, இளவரசன் தனைநோக்கிச் சமணர் பொய்ந்நூல் இது, மறுமைக்காகாது இம்மைக்கும் அற்றே; வளம் மருவு கின்ற சிவகதை இம்மைக்கும் மறுமைக்கும் உறுதி" என வரும் திருத்தொண்டர் புராண வரலாற்றுச் செய்யுளால் அறியலாம். இதனைத் "திருட்டுச் சிந்தாமணிக் கதை" என உமாபதி சிவனார் கூறுவர்; இது காவிய வடிவிற் போந்து சமண சமயக் கருத்துக்களை நாட்டு மக்கட்குக் கொளுத்தும் குறிப்புடையதாய் இருத்தல் பற்றி. உமாபதி சிவனார் இச்சீவக சிந்தாமணியை நன்கு ஓதியுள்ளார் என் பது அவர் பாட்டுக்களால் இனிது உணரப்படுகின்றது. ஒன்று காட்டுதும்: சீவகன் தன் மனைவியருடன் நீர்

விளையாட் டயர்ந்தபோது, அம்மகளிர் அலைந்த திறத்தைக் கூறப்போந்த திருத்தக்க தேவர், "கூந்தலை ஒருகை யேந்திக் குங்குமத் தாரைபாயப், பூந்துகி லொருகை யேந்திப் புகு மிடம் காண்டல் செல்லார்" (சீவக. 2660) என்றனர்; இதனையே நம் உமாபதி சிவனார், கோயிற்புராணப் பதஞ் சலிச் சருக்கத்தில், ஆண்டவன் திருவடிவம் கண்டு தாரு வனத்து முனிமகளிர் பெண்மைப் பண்பிழந்து அலமந்த செய்தி கூறுமிடத்து, "சாயவார் குழலொருகை கலையொரு கையுறத் தாங்கி, பாய வாள்விழி யருவிப் பரவசராய் எதிர் பயில்வார்" (பதஞ்சலி 19) என்ற செய்யுளின்கண் அமைத்து ஓதுகின்றார். இவ்வாறு வருவன பல.

இனி, சேக்கிழார் பிள்ளைத் தமிழ் வாயிலாக, "பயனிலதாகும் சிந்தாமணிவழிப் படர்தல் எனப் போதித், துத்திச் சுவையொரு தோள்வைத் திடுபுலி யுயர்த் தோன் மனம் அடியார் உறுசெயல் நாடப்புரி மதி வலவ" என்றதனால், சேக்கிழார் பெருமான், சிந்தா மணி வழியே படர்ந்த வேந்தன் உள்ளத்தை மாற்றற் கெனத் திருத்தொண்டர் புராணம் பாடியருளினர் என்ற செய்தியைத் திரு. மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் கூறுவதை யறிகின்றோம். திரு. பிள்ளையவர்களும் இச்சீவக சிந்தாமணியின் காவிய நலத்தை யறியாதவரல்லர். ஆனால், டாக்டர் - திரு. உ. வே. சாமிநாதையரவர்கள் தம் ஆசிரிய ரான திரு. பிள்ளையவர்கள் சீவக சிந்தாமணியைப் படித்தி லர் எனத் தாம் எழுதிவரும் தம் வரலாற்றிற் குறித்திருக் கின்றார்கள். சீவக சிந்தாமணியை அச்சிடுதற்குத் தாம் பெற்ற ஏட்டுப் பிரதிகளுள் முதற் பிரதி, "திருவாவடு துறையாதினத்து மகாவித்வான் ம-அ-அ-ஸ்ரீ மீனாக்ஷி சுந்தரம் பிள்ளையவர்கள் பிரதி - க" என்று குறித்துள் ளார்கள். மேலும், திரு. பிள்ளையவர்கள் பாடியுள்ள தல புராணங்களிலும் கோவை, உலா, பிள்ளைத் தமிழ் முதலிய பலவற்றிலும் இச்சீவக சிந்தாமணியின் சொற்களும் சொற்

ளுடர்களும் கருத்துக்களும் எண்ணிறந்தன உள்ளன. இவற்றை நோக்குங்கால், திரு. பிள்ளையவர்கள் இச்சிந்தாமணியின் காவிய நலத்தை நன்கு பயின்று தேர்ந்தவர் என்பது விளங்கத் தெரிகின்றது. திரு. பிள்ளையவர்களின் மாணுக்கரான திரு. அய்யரவர்கள் கூறுவதோ, திரு. பிள்ளையவர்களின் பாக்கள் விளக்குவதோ, இன்னது தான் உண்மை என்பதை அறிஞர்கள் ஆராய்ச்சிக்கு விட்டு விட்டு, இதனை விகடப் பத்திரிகையில் வரும் ஒருவகை விகடம் என அடியேன் கருதி ஒதுக்கிவிட்டு மேற்செல்ல விரும்புகின்றேன்.

இதுகாறும் கூறியவாற்ருல், மண்ணுளும் வேந்தனொருவன் மனக்கண்ணையும் கருத்தையும் கவ்வி மிக்க இன்பூட்டிய மாண்புடையது இச்சிந்தாமணி யென்றும், இதனுடைய இப்பண்பே, சேக்கிழார் பெருமான், திருவருள் துணைபெற்று, தெய்வத் திருத்தொண்டர் புராணத்தைப் பாடியருளுதற்குக் காரணமாயிருந்த தென்றும் நாம் தெளிய அறிகின்ரும்.

சமயக் கருத்துக்களை யுணர்த்தும் அறிவு நூல்கள், பிற சமயக் கருத்துக்களையும் எடுத்தோதி ஆராய்ந்து உண்மை துணியும் கடப்பாடுடையவையாகும். பிற சமயக் கருத்துக்களை நிரல்பட எடுத்தோதாது, பருந்தின் வீழ்ச்சி போல், ஆங்காங்கு ஒன்றிரண்டை எடுத்தோதி மறுத்துத் துணிபு காண்பதால், கற்பார்க்குப் பொருளுணர்ச்சி இனிது நிகழாதாம். ஆதலால், தம் சமயக்கருத்துக்களை வற்புறுத்தும் பகுதியைச் சுபக்கம் எனவும், பிற சமயக் கருத்துக்களைத் தொகுத்தெடுத்து ஓதும் பகுதியைப் பரபக்கம் எனவும் வகுத்துரைப்பது சமய அறிவு நூல்கள் மரபாகும். நம் சைவத்திலும், ஆசிரியர் அருணந்தி சிவனுர், சிவஞான போதத்துக்கு நல்லுரையாக அருளிய சிவஞான சித்தியாரைப் பரபக்கமெனவும் சுபக்கமெனவும் வகுத்து, பரபக்கத்தில், உலகாயதம் முதலிய பல வேறு சமயக் கருத்துக்

களை விரியக்கூறி மறுத்தலைக் காண்கின்றோம்; சுபக்கத்தில், சித்தாந்த சைவத்தின் உயிர் நிலையாக விளங்கும் சிவஞானபோதத்தின் உரையினை விரித்தோதுவதையும் காண்கின்றோம். சங்கற்ப நிராகரணமும் இப்பெற்றியதேயாகும். சைவசமய அறிவு நூல்களைச் சைவர் அனைவரும் தவறாது கற்றுத் தெளிதற் குரியராதலால், அவர்கள். பரபக்கம் சுபக்கம் இரண்டும் கற்றுத் தெளியும் கடன்மை யுடையரா கின்றனர். பரபக்கத்தில் காணப்படும் பல்வேறு சமயங்களுள் சமண சமயமும் ஒன்று. ஆகவே, சமண சமய நூல்களையும் படித்தலும், படிப்போர் எளிதிற் பெற்றுப் படிக்குமாறு அச்சிட்டு வழங்கலும் சமயப் பணியாகின்றன. ஆதலாற்றான், நம் சைவ சித்தாந்த சமாசம், இன்று, சீவக சிந்தாமணியை அச்சிட்டு எளிய விலைக்கு வழங்குகின்றது. இங்கே கூடியிருக்கும் சைவ நன்மக்களாகிய உங்களை, நம் சமாசம் புரியும் இச்சமயப் பணியை ஊக்குமாறு, சமாசத்தின் சார்பாக வேண்டுகின்றேன்.

தேவர் சிந்தாமணியைப் பாடிய காலத்தே நம் தமிழ் நாட்டில் வைதிக சைவம் உயர்நிலையில் இருந்ததென்றும், அவ்வைதிக நெறிபற்றிய புராணவரலாறுகள் பல்கிப் பயிலப்பெற்று வந்தனவென்றும் அடியேன் முன்பே கூறியுள்ளேன். அவர் காலத்துக் கல்வெட்டுக்களில் வைதிக சைவப் புராண வரலாற்றுக் குறிப்புக்கள் பல காணப்படுகின்றன. எனவே, கற்றறிந்தார் கூட்டத்தில் வைதிக சைவ வரலாறுகள் மிகுதியும் பயின்றிருந்தமையின், அவர் கூட்டத்துக்கு அறிவுவிருந்து நல்கும் உரவோர் இவ்வரலாறுகளைப் பெரிதும் பயன் கொண்டனர். தேவரும் தம் சமண சமயநெறி பற்றியே இவ்வினிய காவியத்தைச் செய்தாராயினும், எந்தை சிவபரம் பொருளை விதந்து பலவிடங்களில் பாராட்டி உவமப் பொருளாகக் காட்டி நம்மை மகிழ்விக்கின்றார்.

சிவபெருமானைக் குறித்து ஓதலுற்ற தேவர், " முக்கண் சினந்திகழ் விடையான் " (சீவக. 188), " கொய்ம்மலர்க் கொன்றைமாலைக் குளிர்மதிக் கண்ணியான் " (சீவ. 208), " போகமீன்ற புண்ணியன் " (சீவ. 362), " வார்சடைய வள்ளல்" (சீவ.598)," காரியுண்டிக் கடவுள்" (சீவ.670), " கனையெரி அழலம்பெய்த கண்ணுதல் மூர்த்தி " (சீவ. 2249), " பிறையணி கொண்ட அண்ணல் " (சீவ. 2537) என்பன முதலிய இனிய சொற்றொடர்களால் பாராட்டி யுரைக்கின்றார். இறைவன் பங்குறையும் தேவியாரை, " செல்வி " (188) என்றும், "கணிமலை யரையன் மங்கை மைம் மலர்க்கோதை" (208) என்றும் அழகுறுத்துகின்றார்.

இவ்வாறே, முருகவேளையும் உரியவிடங்களில், " குன்ற மார்பரிந்து வெள்வேல் குடுமிமா மஞ்சையூர்ந்து நின்ற மால் " (சீவக. 286), " கொழுங்கயற் கண்வள்ளி நலன் நுகர்ந்தான் அன்றே நறுந்தார் முருகன் " (சீவக. 482), " தாமரை, அமரர் மேவரத் தோன்றிய அண்ணல் " (சீவ. 994), " கத்திகைக் கண்ணி நெற்றிக் கைதொழு கடவுள் " (சீவக. 971), " முருகவேள் " (சீவ. 1943), " வள்ளல் மாத்தடிந்தான் " (சீவ. 1029), " பூவினுட் பிறந்த தோன் றல் புண்ணியன் " என்றெல்லாம் பாராட்டியிருக்கின்றார். இவ்வாறே திருமாலையும் ஏற்றவிடத்துச் சிறப்பியாது தேவர் ஒழிந்தாரில்லை.

மேலே கூறிய வண்ணம் சிவபெருமான் முதலிய இறை வர்களை எடுத்தோதிய திருத்தக்க தேவர், சிவபெருமான் இறைவியோடு " நல்ல போகத்த"ராய் விளங்கும் செய் தியை, சீவகன் தந்தையான சச்சந்தன் தன் மனைவி விசயையை மணந்து இன்புற்றிருந்த செய்திக்கு உவமமாக வைத்து, " இனம் தமக்கு எங்குமில்லார் இயைந்தனரென்ப, முக்கண் சினந்திகழ் விடையினானும் செல்வியும் சேர்ந்த தொத்தே " என்றும், சீவகன் கந்துக்கடன் மனையில் வளர்ந்த காலையில், அவன் வளர்ச்சிக்கு உவமமாகத்

திருமால் கண்ணனாய் இடையர் மனையில் மறைவாக வளர்ந்த செய்தியைக் கூறுவார், அத்திருமால் இறைவன் முப்புறம் எரித்தபோது அவர் வில்லிற்குக் கணையாகிய வரலாற்றை விதந்து, "போகம் ஈன்ற புண்ணியன் எய்த கணையேபோல், மாகம் ஈன்ற மாமதியன்னான் வளர்கின்றான்" என்றும் கூறுகின்றார். இறைவன் தேவியொடுகூடி உயிர்கட்குப் போகமும் இன்பமும் நல்கும் அருள்வள்ளல் எனத் திருத்தக்க தேவர் கூறும் இச்செய்தி, நம் ஞான சம்பந்தப் பெருந்தகையார் அருளிய,

"போகமும் இன்பமு மாகிப் போற்றி யென்பாரவர் தங்கள்
ஆகமும் உறைவிட மாக அமர்ந்தவர் கொன்றையி னோடும்
நாகமும் திங்களும் சூடி நன்னுதல் மங்கைதன் மேனிப்
பாகம் உகந்தவர் தாமும் பாண்டிக் கொடுமுடி யாரே"

என்றும்,

"சார்ந்தவர்க் கின்பங்கள் தழைக்கும் வண்ணம்
நேர்ந்தவன் நேரிழை யோடும் கூடி;
தேர்ந்தவர் தேடுவார் தேடச் செய்தே
சேர்ந்தவன் உறைவி டம்திரு வல்லமே"

என்றும் வரும் திருப்பாட்டுக்களை நினைவுறுத்துகின்றன.

மேலும், "போகம் ஈன்ற புண்ணியன்" - தான் சத்தியும் சிவனுமாய் உலகத்துக்கெல்லாம் போகத்தை உண்டாக்கின புண்ணியன்; புண்ணியன் என்றார், திரிபுரத்தையழித்தும் நஞ்சுண்டும் பல்லுயிர்களையும் காத்தலின் என ஆசிரியர் நச்சினார்க்கினியார் உரை கூறுகின்றார். இதனை எழுதுங்கால், நச்சினார்க்கினியார் உள்ளத்தில், நாவரசர் வழங்கியருளிய,

"சீரார் முடிபத் துடையான் தன்னைத்
தேசழியத் திருவிரலால் சிதைய நூக்கிப்
பேரார் பெருமை கொடுத்தான் தன்னைப்
பெண்ணிரண்டு மாணுமாய் நின்றான் தன்னைப்

போரார் புரங்கள் புரள நூறும்
புண்ணியனை வெண்ணீ றணிந்தான் தன்னை
ஆரானை ஆருரில் அம்மான் தன்னை
அறியாது அடிநாயேன் அயர்த்த வாறே"

என்ற திருத்தாண்டகத்துள், "போரார் புரங்கள் புரள நூறும் புண்ணியனை" என்ற தொடர் நின்று உரிய பொருளை வழங்கியிருப்பது புலனாகின்றது.

சீவகன் கட்டியங்காரனை வென்று, இலக்கணையை மணந்து இன்புற்றவன், நகரின்கண் உலாவருங்கால், அவனைக்கண்ட மகளிருள் வேட்கை பிறந்த மகளிர் சிலர் செயல் கூறலுற்ற தேவர், சிலர் சீவகன் நகருலா வரலைக் காண்டற்குத் தம்மைக் கைபுனைந்து கொள்ளலுற்று, ஒருபாதி முடிந்ததும், சிலர் சீவகன் வந்தான் என்று கூறிவிடவே, அவ்வளவில் அவனைக் காண்டற்கு ஓடிவர, ஒருபாதி கைபுனையாமையின் நாணி அதனை மறைத்துக்கொண்டு நின்றனர்; அவர் நின்ற தோற்றம், உமையமர்ந்து விளங்கும் இறைவன் போல்கின்ற தென்பார்,

"குறையணி கொண்டவாறே கோதைகால் தொடரஓடிச்
சிறையழி செம்பொன்உந்தித் தேன்பொழிந் தொழுக ஏந்தி,
பறையிசை வண்டுபாடப் பாகமே மறையநின்றார், [தொத்தார்"
பிறையணி கொண்ட அண்ணல் பெண்ணொர்பால் கொண்ட

என்று கூறியுள்ளார். இதன்கட் காட்டிய பிறையணியும் பெண்ணொரு பாகமும், நாவரசர், திருவையாற்றில் கண்டு ஓதியருளிய திருப்பாட்டாகிய, "மாதர் பிறைக் கண்ணியானை மலையான் மகளொடும் பாடி, போதொடு நீர்சுமந்தேத்திப் புகுவா ரவர்பின் புகுவேன்" என்பதனை நினைவுக்குக் கொணர்கின்றன. இவ்வாறு நால்வர் வழங்கிய திருமுறைத் திருப்பாட்டுக்கள் பல இச்சிந்தாமணியைப் படிப்பவர் மனத்தே ஆங்காங்கே தோன்றி இன்புறுத்துகின்றன. இவ்வாறே, வீரச்சுவை நிகழுமிடத்தும், அஃதாவது,

கட்டியங்காரன் சீவகன்பால் தீராச் செற்றங்கொண்டுள்ளான் என்ற செய்தியை நாகமாலை யென்பாள் கந்துகடனுக்கு ஓலையெழுதித் தெரிவித்த விடத்தே, "வெம்பினன் காரியுண்டிக் கடவுளினிற் கனன்று வேந்தன்" என்று எழுதியுள்ளாள்; இத்தொடர், *மலைபடுகடாத்து, "பேரிசை நவிரம் மேஎ யுறையும், காரியுண்டிக் கடவுள தியற்கையும்" (84 - 5) என்ற அடிகளை நினைப்பிக்கின்றது. மதனன், மன்மதன் என்ற இருவரும் விசயன் என்பவனுடன் பொருது பட்டழிந்தபின், சீவகன் தோழனான புத்திசேனன் தன்னை எதிர்த்த வேந்தரொடு போர் செய்தான் என்பார், "வளைகலத் திகிரித் தேர்மேல் மன்னரைக் குடுமி கொண்டான்" என்றவர், அவன் வெகுண்டு நின்ற நிலையை விதந்து, "கணையெரி அழலம் பெய்த கண்ணுதல் மூர்த்தி யொத்தான்" (2249) என்கின்றார். "அழலம்பு ஒன்றினால் எய்த பெம்மான் உறையும் இடம் ஒற்றியூரே" எனவரும் திருநெறித் தமிழை இவ்வடி நினைப்பித்தல் காண்க.

இவ்வண்ணம் சைவத் திருமுறைப் பாட்டுக்களை இச்சிந்தாமணிச் செய்யுட்கள் ஆங்காங்குப் படிப்போர் உள்ளத்தே நினைவு கூர்வித்தலால், நாம் ஓர் உண்மையினை உணர வேண்டியவர்களாகின்றோம். தேவர் காலத்தே, சிவபரம் பொருளின் வரலாறு கூறும் சைவப் புராணங்கள் தமிழ் மொழியில் பெரும்பாலும் இல்லையென்றே கூறலாம்; தேவாரத் திருமுறைகளே அவ்வரலாற்றினை மக்கட்குச் சுருக்கமாகக் குறிப்பிக்கும் நிலையில் இருந்தன. அவையே,

---

*இம்மலைபடுகடாம், "நல்லிசைக்கடாம் புனைநன்னன் வெற்பில்" பல்லவ வேந்தர்தம் "வாகையும் குரங்கும் விசையமும்" தீட்டினர் எனவரும் திருவண்ணாமலைக் கல்வெட்டொன் (A. R. No. 480 of 1902. No. 69 of S. I. I. Vol. VIII) றால் குறிக்கப் பெறுகின்றது.

தேவர் தோன்றுதற்குச் சிறிது ஏறக்குறைய இரண்டு நூற்றாண்டுகட்குமுன் மழுங்கியிருந்த சிவநெறியை மேம்படுத்தி நிலை நாட்டியதோடு, உயர்ந்தோங்கியிருந்த சமண் சமய நெறியை வீழ்ந்தாழ்ந்துபடச் செய்தன. தம் சமயத்தின் சீரைக் குலைத்துச் சைவத்தை உயர்த்தி நிறுவிய இத்திருமுறைகளை, விரிந்த மனப்பண்பு சான்ற தேவர், பன்முறையும் ஓதிப்பயின்றிருத்தல் வேண்டும். அத்திருமுறைகட்குரிய வன்மை காண்டற்காகவேனும் உண்மையாக அவர் ஊன்றிப் பயின்றிருத்தல் வேண்டும். வீழ்ந்த சமயத்தை நன்னிலைக்குக் கொணர முயல்வோர், அதன் வீழ்ச்சிக்கு ஏதுவாகிய அகக்காரணம், புறக்காரணம் இரண்டினையும் ஆராய்தல் வினைத்தூய்மையாகும். சைவத் திருமுறை புறக்காரணமாதலின், இதனை அவர் நன்கு பயின்றிருப்பர் என்பதில் ஐயமில்லை.

இதனை உண்மையென நிலை நாட்டற்கு வேறு கருவி வேண்டா; தேவர் பாடிய சிந்தாமணியே போதிய சான்று பகருகின்றது. "பூவார் கொன்றை" யென்று தொடங்கும் சீகாழித் திருப்பதிகத்தில், ஞானசம்பந்தப் பெருந்தகையார், "மாடே ஓதம் எறிய வயற் செந்நெற் காடேறிச் சங்கீனும் காழியார்" என்ற விடத்துச் செந்நெல் வயலைச் "செந்நெற் காடு" என்று அருளினார்கள்; இதனைத் தேவர் கண்டு வியந்தெடுத்து, "தேய்பிறை இரும்புதம் வலக்கை சேர்த்தினர், ஆய்செந்நெல் அகன்ற காடு அரிகுற்றார்களே" (சீவக. 55) என்றனர். பிள்ளையார் திருப்புறம்பயத்துத் திருப்பதிகத்துள், "குருந்தொசி பெருந்தகையும் நீயும் பிரிந்தனை புணர்ந்தனை" என்றாராக. தேவர், அதன்கண் உள்ள வினைத்தொகையை விரித்து, "விரிபுனல் தொழுநையாற்றுள், கோல்நிற வளையினார்க்குக் குருந்தவன் ஒசித்த தென்றுன்" (சீவக. 209) என்றார். தேவர், சீவகன், நிரை கவர்ந்த வேட்டுவரை வெருட்டியோட்டிய செய்தி கூறு

மிடத்தே, "விளியும் சங்கும் வீணையும் பறையும் கோடும் கடத்திடை முழங்கக் காருங்கடலு மொத்தெழுந்த வன்றே" (சீவ. 447) என்றது, ஞானசம்பந்தப் பிள்ளையார், "வேத மோதி" யென்று தொடங்கும் திருப்பழனப் பதிகத்து, "வீளைக் குரலும் விளிசங்கொளியும் விழவின் ஒலியோவா, மூளைத்தலைகொண் டடியாரேத்தப் பொடியா மதிள் எய்தார்" என்ற திருப்பாசுரத்தைக் காட்டுகின்றது. "கொட்டமே கமழுங் குழலாளொடு கூடினாய்" (திருஞான. கோயில். ஆடினாய்) எனப் பிள்ளையார் அருளினாராக. தேவர், "கொட்டமே கமழும் குளிர் தாமரை" (சீவக. 2575) என்றனர்.

நாவரசர் வழங்கியவற்றுள், "நீறேறு" எனத் தொடங்கும் திருமழபாடித் திருத்தாண்டகத்துள், "விரிசுடராய் விளங்கொளியாய் நின்றான் கண்டாய், விழவொலியும் வேள்வொலியு மானான் கண்டாய்" (10) என்றவிடத்து வரும் விழவொலியும் வேள்வொலியும், தேவர் பாடிய சிந்தாமணிக்கண், "விழவும் வேள்வும் விடுத்த லொன்றின்மையால், புகழலாம் படித்தன்றிது பொன்னகர்" (138) என வருகின்றன. "விளங்குதோள் நலார்முள்கு மாயரும் மொய்ம்பொ டேகினர்" (சீவ. 420) எனவரும் இதன் கண் முள்குதல் என்ற அரியசொல், "முள்குவார் போகம் வேண்டின் முயற்றியால்" (9) எனவரும் நாவரசர் அருளிய திருவொற்றியூர், "வெள்ளத்தைச் சடையில் வைத்த வேத கீதன்" என்று தொடங்கும் திருநேரிசையில் விளங்கி நிற்கின்றது. "சின்னமாம் பன்மலர்கள் அன்றே சூடிச் செஞ்சடைமேல் வெண்மதியம் சேர்த்தினானே" (நாகை. தாண். பாரார் 4) என நாவரசர் நவின்றருளினாராக. தேவர், "சின்ன மாமலர்க் கோதைத் தீஞ்சொலார் போற்றிசைப்பத் திருமால் போந்தான்" (2369) என்றார். "வேன லானை யுரித்துமை யஞ்சவே, கான லானைக் கண்டார் கடவூரரே" (கடவூர். குறுந். மலைகொள். 3) என

நாவரசர் வழங்கியது, "வேனல் மல்கி வெண்தேர் சென்ற வெந்நிலம், பானல் மல்கி வெண்பா லன்னம் பாய்ந்தவே" (2578) எனச் சிந்தாமணிக்கண் இடம் பெறுகிறது.

சீவகன் கனகமாலை யென்பாளை மணந்து இனிதிருக்குங்கால், காந்தருவ தத்தையின் விஞ்சையால் அவளையடைந்த நந்தட்டனை அவன் அவட்குக் காட்ட, கண்டு மகிழ்ந்த கனகமாலை, "எழுமையும் பெறுக இன்ன இளங்கிளைச் சுற்ற மென்றாள்" (1730) என வரும் இச்சிந்தாமணி, சுந்தரமூர்த்தி சுவாமிகள், திருக்குருகாவூர்த் திருப்பதிகத்தில், "இளங்கிளை யாரூரன்" என்ற திருவாக்கில் அமைந்திருக்கின்றது. இவ்வாறே பதினொராந் திருமுறையில் பல பாசுரங்கள் இச்சிந்தாமணியின் ஆக்கத்திற்குத் தேவர்க்கு உதவி செய்துள்ளன.

தேவாரத் திருமுறைகளிற் காணப்படும் அரிய சொற்பொருள்கள் பல, தேவரது சீவக சிந்தாமணிக்கண், உள்ளவாறே வந்துள்ளன. ஞானசம்பந்தப் பெருந்தகையார் தீர்த்தம் என்ற சொல்லை ஆகமம் என்ற பொருளில் வழங்கியதோடு, அது சமணர் கூட்டத்தில் வழங்குவது என்ற குறிப்பும் தோன்ற, திருக்கருகாவூர், "முத்திலங்கு" என்று தொடங்கும் திருப்பதிகத்தில், "போர்த்த மெய்யினர் போதுழல் வார்கள்சொல், தீர்த்தமென்று தெளிவீர் தெளியேன்மின்" என்று அருளுகின்றார்கள். அஃது இச்சிந்தாமணியில், "தீராவினை தீர்த்துத் தீர்த்தம் தெரிந்துய்த்து, வாராக் கதியுரைத்த வாமன்தான் யாரே" (1247) என்று வருகின்றது. திரிச்சிராப்பள்ளி "நன்றுடையானை" என்று தொடங்கும் திருப்பதிகத்தில்,

> "கொலைவரையாத கொள்கையர் தங்கள் மதில்மூன்றும்
> சிலைவரையாகச் செற்றனரேனும் சிராப் பள்ளித்
> தலைவரைநாளும் தலைவரல் லாமை யுரைப்பீர்காள்
> நிலவரைநீல முண்டதும் வெள்ளை நிறமாமே"

எனவரும் திருப்பாசுரத்தின் ஈற்றடி, சீவகன் சுரமஞ்சரி

கொண்ட கொள்கையைச் சிதைத்து மணந்து வருவதாகச் சூள்செய்யும் பாட்டின் சிந்தாமணியில்,

> " வண்டுதேன் சிலைகொள் நாணு மாந்தளிர் மலர்க ளம்பாக்
> கொண்டவன் கோட்டந் தன்னுள் கொடியினைக் கொணர்ந்து நீலம்
> உண்டது காற்றி ஆண்பேர் ஊட்டுவல், உருவக் காமன்
> கண்டபொன் படிவம் சார்ந்து கரந்திரு நாளை என்றான் "

எனவருகின்றது. மேலும், ஞானசம்பந்தர், " நிலவரைநீலம் உண்டதும் வெள்ளை நிறமாமே " என்ற தொடர், நிலவரை நீலம் உண்டது வெள்ளை நிறமுமாமே என இயைந்து உம்மையை இசை நிறையாக்குகின்றது ; அவ்வியையு, சிந்தாமணியில், " நுண் துகில் வேதலஞ்சி நெருப்பகம் பொதிந்து நோக்கிக், கொண்டுபோய் மறையவைத்தால் கொந்தழல் சுடாதுமாமே " (1434) என்ற பாட்டில் அமைந்து கிடக்கின்றது. " வல்லோர் செதுமொழி சீத்தசெவி " (கலி. 68) என்றுவரும் சொல், " செதுமகப் பலவும் பெற்றுச் சிந்தைகூர் மனத்தை யாகி," (சீவக. 1124) எனச் சிந்தாமணியிலும், " செதுமதித் தக்கன் வேள்வி செற்ற மறத்தினர் " என ஞானசம்பந்தர் திருவாக்கிலும், " செதுமதிச் சமணர் " எனத் திருவிசைப்பாவிலும் வரக்காண்கின்றேம். செதுமொழி என்ற கலித்தொகை வழக்கினை மாற்றி வேறு சொற்களோடு இயைத்து வழங்குந் திறத்தை முதன் முதலாகப் பிற்காலத்தார்க்கு வழங்கிக் காட்டிய பெருந்தகையாதலின், அதனை மேற்கொண்டே தேவரும் வழங்கியிருக்கின்றனர். இவ்வாறே, பிள்ளையார், " எயில் மூன்றும் எரியுண்ணக் கணையல் செய்தான் " (கழுக்குன்றம் - 4) என்றும், " ஒருங்களிநீ இறைவா என்று உம்பர்கள் ஓலமிடக்கண்டு, இருங்களமார விடத்தை இன்னமுது உண்ணிய ஈசர் " (கற்குடி - 4) என்றும் வருமிடங்களில் கணைவிடுத்தான் என்பதைக் " கணையல் செய்தான் " எனவும், உண்ட என வரற்குரிய பெயரெச்சத்தை " உண்ணிய "

எனவும் வழங்கிக் காட்டும் தலைமை, பிள்ளையார் அருளிய திருநெறித் தமிழில் சிறந்து நிற்றலை நாம் நன்கு காணலாம்.

இவ்வாறே, நம் நாவரசர் வழங்கிய சில அருஞ்சொற்களைத் தேவர் தாமும் எடுத்தாண்டு நமக்கு அவற்றின் பொருளை உணர்த்துகின்றார். திருவாரூர், "குழல்வலம்" என்று தொடங்கும் திருநேரிசையில் வரும், "தொழுதகம் குழைய மேவித் தொட்டிமையுடைய தொண்டர் அழுதகம் புகுந்து நின்றார்" (3) என்பதில், தொட்டிமையென்ற சொற்குப் பொருள் விளக்குவாராய்த் தேவர், "காமன் தந்த தொட்டிமையுடைய வீணைச்செவிச் சுவையமிர்தம் என்றான்" (சீவக. 2047) என்று பாடுகின்றார். தொட்டிமை - ஒற்றுமை. துளங்குதல் என்ற சொல்லுக்கு நடுங்குதல், அசைதல் என்ற பொருளிருக்கக் கண்டிருக்கின்றோமேயன்றி, வணங்குதல் என்ற பொருண்மை பிற்காலத் தமிழ் நூல்களிற் கண்டதில்லை. வணங்குதல் என்ற பொருளில், முதலாவதாக, நம் சொல் வேந்தர், "தொண்டர் தொழுதேத்தும் சோதியேற்றார், துளங்கா மணிமுடியார் தூய நீற்றார்" (பந்தணை. தாண். நோதங்கம். 5) என்று வழங்கியருளினர்; தேவர், "முனைவற்றொழுது முடிதுளக்கி, முகந்து செம்பொன் கொளவீசி" (2357) என்று அவ்வணங்குதற் பொருளே வர அமைத்தோதினர். அரித்தல், 'சுட்டுதல்' என்ற பொருளில் நமைத்தல் என்றொரு தமிழ்ச்சொல் உண்டு. அதனை மக்கள் வழக்காற்றில் காண்டல் கூடுமேயன்றி, நூல் வழக்கில் காண்டலரிது. இச்சொல்லை நம் நாவேந்தர், திருவாரூர் பொய்ம்மாய என்னும் திருத்தாண்டகத்து மூன்றும் பாசுரத்தில், "நல்லுருவிற் சிவனடியே யடைவேன் நும்மால் நமைப்புண்ணேன் கமைத்துநீர் நடமின்களே" எனப் புண்ணிய பாவ முதலியவற்றை விளித்துக்கூறி யருளுகின்றார்கள். இச்சொல்லையே தேவர் சிந்தாமணியில், "குஞ்சி நமைத்த பூங்

தாமம் தோய நகைமுக விருந்து பெற்றான்" (2839) என்று அமைத்துப் பாடுகின்றார். இனி,

"வம்படுத்த மலர்ப்பொழில் சூழ மதிதவழ்
செம்படுத்த செழும்புரி சைத்தெளிச் சேரியீர்
கொம்படுத்த தோர்கோல விடைமிசைக் கூர்மையோடு
அம்படுத்த கண்ணாளோடு மேவல் அழகிதே"

எனவரும் ஞானசம்பந்தப் பெருந்தகையின் திருப்பாசுரத்தையும்,

வம்புகொண் டிருந்த மாதர் வனமுலை மாலைத் தேன்சேர்
கொம்புகொண் டன்ன நல்லார் கொழுங்கயல் தடங்கண் போலும்,
அம்புகொண் டரசர் மீண்டார் ஆக்கொண்டு மறவர் போனார்,
செம்புகொண் டன்ன இஞ்சித் திருநகர்ச் செல்வ! என்றார்.
—சீவ. 439

என்ற சிந்தாமணிச் செய்யுளையும் எதுகையொன்றே பற்றி ஒப்பு நோக்குக; திருநாவுக்கரசர் பாடியருளிய திருமருகல் குறுந்தொகைக்கண் வரும்,

"நீடு நெஞ்சுள் நினைந்துகண் ணீர்மல்கும்
ஓடும் மாவினை யோடொண்கொடி மாதராள்
மாட நீள்மரு கற்பெரு மான்வரின்
கூடு நீஎன்று கூட விழைக்குமே"

என்ற திருப்பாசுரப் பொருளையும், சிந்தாமணிக்கண், தேவர் குணமாலை யென்பாள் வாயில் வைத்து வழங்கும்,

"சென்றார் வரைய கருமம்; செருவேலான்
பொன்தாங் கணியகலம் புல்லப் பொருந்துமேல்
குன்றாது கூடுகெனக் கூறிமுத்த வார்மணல்மேல்
அன்றாங் கணியிழையாள் ஆழி யிழைத்தாளே"

என்ற செய்யுட் பொருளையும் வைத்து ஒப்பு நோக்குக. இவ்விருவகை ஒப்பு நோக்கானும், திருத்தக்கதேவர், சைவத்திருமுறை நூல்களை நன்கு ஓதிப் பயின்ற நற்பயிற்சி யுடையர் என்பது இனிது விளங்கும். (தொடரும்)

# திருவாரூரர்

[P. தியாகராஜப் பிள்ளை]

## XXII

### ஆரூரரும் இயற்கை விரியும்

#### பறவைகளும் விலங்குகளும்

வாழ்த்து

பாடினர் எந்தைதன் பைங்கழற் றெண்டின் பழமையினால்
நாடினர் கைலைமா நாயகன் நற்றாளிந் நல்லுடலால்
கூடினர் பெற்றிடக் கோதில் நிலையைக் கொடுத்தருளத்
தேடினர் ஆரூர்த் தியாகரைச் சேர்ந்து சிறந்தனரே.

இயற்கை வடிவைத் திருமேனியாகக் கொண்ட சிவபெருமானுடைய திருவடியை ஆங்காங்குச் சென்று பணிந்து வந்த திருவாரூரர், அச்சிறந்த திருவூர்களில் வாழும் விலங்குகளையும் பறவைகளையும் தம் திருப்பாட்டுக்களில் குறிக்கலாயினார். மக்கள் வாழுமிடங்களிலெல்லாம் விலங்கும் பறவையும் அவர்களுக்குத் துணைசெய வாழ்கின்றனவன்றோ! இதனையறியார் அவற்றின் உயிரைப்போக்கி உடலை உணவாக்குதல் என்ன கொடுமை!

2. நாரை எனும் பறவை புனலொடு ஆகிய சோணாட்டின் நீர் நிலைகளில் வாழும் சிறந்த பறவை. அதனைப் புலவர்கள் பாவில் பெரும்பாலும் எடுத்துப் பாடியிருக்கின்றார்கள். "செங்கால் நாராய் செங்கால் நாராய்" என்ற ஆன்றோர்

செய்யுளைத் தமிழறிஞர் யாவரும் அறிவர். சங்கச்செய்யுட்களில் நாரையின் எடுத்துரை (வர்ணனை) பலவிடங்களில் காணப்படும். திருவாரூரர் நுண்ணிய நோக்குடையவர். தாம் கண்ட பொருள்களின் நுட்பங்களை யெல்லாம் தம்பாடல்களில் பதிவுசெய்தனர். திருவாரூரைப் பாடுங்கால் (95) 'தினைத்தாள் அன்ன செங்காலுரை சேருந் திருவாரூர்' என்று நாரையினுடைய கால் செந்நிறமான தென்றும் தினையினுடைய தட்டையைப்போன்று அழுத்தமுடைய தென்றும் குறித்தனர். கானாட்டு முள்ளூரில் (40) 'தூவிவாய் நாரையொடு குருகுபாய்ந் தார்ப்பத் துறைக்கெண்டை மிளிர்ந்து கயல்துள்ளி விளையாட, காவிவாய் வண்டுபல பண் செய்யுங் கழனி கானாட்டு முள்ளூர்' என்று கவலையற்ற பறவையினம் ஆடுவதைத் தீட்டினர். "தூவிவாய் நாரை" என்ற தொடருக்கு "மீன் உண்ணும் வாயையுடைய நாரை" எனப் பொருள் கொள்கின்றார் திரு. அ. சோமசுந்தரஞ் செட்டியார். ஆனால் திரு. இராமசுவாமி நாயுடு "சிறகையுடைய நாரை" எனப்பொருள் செய்தார்.

பின்னுமோர் திருவாரூர்ப் பதிகத்தில் நாரைகள் உழன்று திரிவதை "சூழுமோடிச் சுழன்றுழலும் வெண்ணாரைகாள்" என்றும், "சுற்று முற்றுஞ் சுழன்றழலும் வெண்ணாரைகாள்" என்றும் கூறினார். நாரைகள் வெண்ணிறத்தன என்பதை அப்பெயரே விளக்கும். அவைகள் சோலைகளிலும் வாழும் என்பதை "இலைகள் சோலைத் தலையிருக்கும் வெண்ணாரைகாள்!" என்றும் அதே பதிகத்தின் மற்றொருபாகத்தில் எடுத்துச் சொன்னார். பழைய வூராகிய திருவாரூரில் நாரைகளேயன்றி மற்றும்பல குருவிகளும் அச்சமின்றி வாழ்ந்தன. அவைகளுக்கும் திருவாரூரில் பிறந்த சிறப்பும் மேன்மையும் உளவன்றோ!

3. திருவாரூரர் கிள்ளைகளும் பூவைகளும் மெல்லிய லாருக்கேயுரிய பறவைகள் என்பதைக் காட்டவும், அவை கள் பேசுமாற்றல் சிறிது அடையக்கூடியன என்பதைக் காட்டவும் அவைகளைத் தம் உயிர்க் காதலன்பால் வாயிலாக விடுக்கும் மரபில் "பறக்குமென் கிள்ளைகாள்!", "பாடுமெம் பூவைகாள்" என அவைகளை விளித்தார். அங்கு சக்கர வாளத்திளம் பேடைகள், சேவல்கள், தேன்வண்டுகள், கொண்டல்கள், வார் மணற் குருகுகள், கூடுமன்னப் பெடை கள் முதலியவும் வாழ்ந்தன. கொடிய பாம்புகளும் தம் கொடுமை நீங்கி மற்றைய உயிர்களோடு வாழ்வதை "குரவ நாறக்குயில் வண்டினம்பாட நின்றரவ மாடும் பொழிலந்தணு ரூர்" என்ற பாடலில் விளக்கினர்.

4. பலவூர்களிலும் குயிலும் மயிலும் மிகுதியாக வளர்க்கப்பட்டன. திருக்கச்சியை (10) "கொடிகளிடைக் குயில் கூவுமிடம் மயிலாலு மிடம், பேடைதன் சேவலோடாடு மிடம்" என்று கொண்டாடினர். பின்னும் "மயிலார் சோலை கள் சூழ்ந்த வன்பார்த்தான் பனங்காட்டூர்" என்றனர். கலய நல்லூரில் (16) "அரும்பருகே சுரும்பருவ அறுபதம் பண் பாட அணிமயில்க ணடமாடும்." மற்றும் அங்கு குருகினமும் அன்புபூண்டு அடியவருடன் எம்பெருமானை வணங்குத லில் ஈடுபட்டிருப்பதை மக்களை விளித்து "சோலைமலி குயில் கூவக் கோலமயிலாலச் சுரும்பொடு வண்டிசை முரலப் பசுங்கிளி சொற்றுதிக்க, காலையிலும் மாலையிலும் கடவுள் அடிபணிந்து கசிந்த மனத்தவர் பயிலும் கலய நல்லூர் காணே" என்று காட்டுகின்றார்.

வண்டுகளே மிகுதியும் பாடல் பெற்றவை. அவற்றின் இசையைப் போற்றாத புலவர்கள் இல்லை. "அஞ்சிறைத் தும்பி" என சிவபெருமானல் அழைக்கப்பட்டது அன்றோ

வண்டு! மலர் உள்ளவிடத்தே வண்டின் ஈட்டம் காணுமலி ருப்பது அரிது. கோவிலைச்சுற்றிலும் பூஞ்சோலையிருப்பதை யும் அங்கு வண்டுகள் இசைபாடுவதையும் ஆரூரர் கண்டனர். "வண்டார் பூம்பொழில் சூழ்மழபாடி" எனவும், "சுரும்புடை மலர்க்கொன்றை...விரும்பிய குருகாவூர்" எனவும் பாடுகிறார். திருச்சோற்றுத் துறைப்பதிகத்தில் "ஆலு மயிலும் ஆடல ளியும், சோலைதரு நற்சோற்றுத்துறை" எனவும், "திதையும் தாதும் தேனுஞ் ஞிமிறும், துதையும் பொன்னிச் சோற்றுத் துறை" எனவும் கூறினர். திருநாகேச்சுரப் பதிகத்தில் (99) "விரிதரு மல்லிகையும் மலர்சண்பகமு மளைந்து, திரிதரு வண்டு பண்செய் திருநாரையூர்" என்றும், "பங்கய மாமலர்மேன் மதுவுண்டு பண்வண் டறையச் செங்கய னின் றுகளுந் திருநாரையூர்" என்றும், "கொங்கணை வண் டரற்றக் குயிலும் மயிலும் பயிலும் தெங்கணை பூம்பொழிற் சூழ்திரு நாரையூர்" என்றும், "தேனும் வண்டு மதுவுண்டின் னிசைபாடியே கானமஞ்சை யுறையும் தண்கழுக் குன்றம்" என்றும் வண்டுகள் சோலைகளிலும் குளங்களிலும் மலர்த் தேனையுண்டு தம் விருப்பப்படி திரிவதைக் கண்டு மகிழ்ந்தார்.

5. 48-ல் "கொம்பின்மேற் குயில்கூவ மாமயிலாடும் பாண்டிக் கொடுமுடி" எனக் குயில் பாடுவதையும் அதற்கேற்ப மயிலாடுவதையும் பகர்ந்தார். திருப்புனவாயிலில் ஆந்தைக் கூட்டம் மிகுதி. அதனைப் "பொத்தில் ஆந்தைகள் பாட்ட ரூப் புனவாயில்" என்கிறார். அப்படியே 34-ல் "பொத்தில் ஆந்தைகள் பல பாட்டரூப் புகலூரைப் பாடுமின்" என்றும், "புள்ளெலாம் சென்று சேரும் பூம்புகலூர்" என்றும் பாடி னர். (32) திருக்கோடிக்குழகரில் "கூடிப் பொந்தில் ஆந்தை கள் கூகை குழற...கோயில் கொண்டாய்" எனப் பாடினர். ஆந்தையின் பாட்டிலும் ஆரூரர் ஒருநயங்கண்டனர் போலும். இந்நாளில் அதன்பாட்டு 'அலறல்' எனப்படுகிறது. இப்புன

வாயிலில் கானங் கோழிகளும் புறவும் மிகுதி. அவற்றின் வாழ்க்கையை ஒரு சில பாடல்களில் விரித்துரைத்தனர். "பிறவுகள்ளியின் நீள் கவட்டேறித்தன் பேடையைப் புறவம் கூப்பிடப் பொன்புனஞ் சூழ் புனவாயில்" எனவும், "கள்ளிவற்றிப் புற்றீந்து வெங்கானங் கழிக்கவே புள்ளி மானினம் புக்கொளிக்கும் புனவாயில்" எனவும், "கற்றாறு கார்க்காட்டிடை மேய்ந்த கார்க்கோழிபோய், புற்றேறிக் கூகூ வென வழைக்கும் புனவாயில்" எனவும் பாடுகின்றார். புறாக்கள் தம் பெடைகளைக் கூப்பிடும் ஒலியையும் உற்று நோக்கியுளார் நமது ஆரூரர் பெருமான். கோழிகள் புற்றின் உச்சியில் ஏறி கூ கூ எனக் கூவுவதைக்கூடத் தம்பாடலில் வரைந்திட்டார்.

6. திருநீடூர்ப் பதிகத்தில் (56) "பாடுமாமறை பாட வல்லானைப் பைம்பொழிற்குயிற் கூவிடமாடே, ஆடுமாமயில் அன்னமோ டாட அலைபுனற் கழனித் திருநீடூர்" என பொழிலில் குயில்கூவ மயில்ஆடக் கண்ட அன்னமும் கூட ஆடுவது சொல்லப்பட்டது. மகளிர்கள் திருநின்றியூரில் (65) மாளிகை தோறும் எவ்வாறு காணப்பட்டனர் என்பதை உவமை கூறுவதின் முகமாக மயில் முதலியவற்றைக் குறிக்கின்றார்.

6. மேற்சொன்னதைப் பேடை மஞ்சையும் பிணைகளின் கன்றும் பிள்ளைக் கிள்ளையும் எனப் பிறைநுதலார், நீடு மாடங்கள் மாளிகைதோறும் நிலவுதென்திரு நின்றியூர்" என்ற இடத்தில் காணலாம். மற்றும் இவ்வூரினைத் "திணை கொள் செந்தமிழ்ப் பைங்கிளி தெரியுஞ் செல்வத்தென்திரு நின்றியூர்" எனப் பச்சைக் கிளிகள் அகத்தமிழைத் தெரிந்திருந்தன என்கிறார். சொன்னதைச் சொல்லும் கிளிப்பிள்ளை என்ற பழமொழிக்கிணங்க அங்கு ஆடவர் மகளிர்கள் அகத் தமிழைக்கற்று உரையாடுவதைக் கேட்டுக்கேட்டு அதனைக்

கிளிகள் திருப்பிக் கூறின. இதனால் அந்நாளில் மக்கள் அகத் தமிழை எவ்வளவு சிறப்பாகப் போற்றிவந்தனர் என்பது தெரிகிறது. அகத்தமிழ் கற்றிருப்பது ஓர் அரிய செல்வ மாகக் கருதப்பட்டது போலும். திருக்கேதாரத்தில் உள்ள கிளிகள் "வாழை யொண்கனி கீறியுண்ணும்" என்பது முன்பே குறிக்கப்பட்டது. சீபர்ப்பதத்தில் கிளிகள் தினைக் கதிரைக் கொய்வதையும் அவைகளைக் குறமகளிர் விரட்டு வதையும் அழகாகப் பாடியுள்ளார். "கன்னிக் கிளிவந்து கவைக்கோலிக் கதிர்கொய்ய, என்னைக்கிளி மதியாதென்று எடுத்துக்கவண் ஒலிப்பத், தென்னற்கிளி திரிந்தேறிய சீபர்ப் பதம்" எனக் கூறினார். மற்றும் "செவ்வாயின கிளிபாடிடும் சீபர்ப்பதம்" என்று கிளிகள் சிவந்த வாயினையுடையதென் றும் அவைகள் பாடுந்திறம் வாய்ந்தன என்றும் குறிப் பித்தார்.

7. விலங்குகளில் சிறந்தது யானை என்பது தெரிந்த தொரு பண்டம். பண்டையிலும் யானையைப் பெருஞ்செல்வ மாகக் கருதினார். அவைகள் காடுகளிலும் மலைகளிலும் தம் விருப்பமாய் திரிந்து கொண்டிருந்தன. ஆரூரர் மலையின் உச் சியிலுள்ள கோவில்களையாவது அல்லது மலை நாட்டுக்கோவில் களையாவது பாடும்பொழுது யானையின் வாழ்க்கையை மிக விரித்துக் கூறுகின்றார். திருமுதுகுன்றத்தைப் பாடுகையில் (43) 'வாரிக்கட்சென்று வளைக்கப்பட்டு வருந்திப்போய் மூரிக் களிறு முழக்கறு முதுகுன்று' என்றார். மக்கள் யானைகளைப் பிடிப்பதற்கு வெள்ளத்தில் விரட்டி அவைகளைக் களைக்கச் செய்து பிடிப்பார்கள் போலும். அச்சூழ்ச்சியில் தப்பும் யானை கள் பிளிறிடுதலால் முழக்கம் விடாது முதுகுன்றில் கேட்கப் படுகிறது என்றனர். பின்னும் இப்பதிகத்தில் "மழை வளரும் நெடுங்கோட்டிடை மதயானைகள், முழைவளராளி முழக்கறு முதுகுன்று" என்றார். அங்கு மதயானைகளோடு ஆளிகளும்

முழங்கின எனத் தெரிகிறது. யாளி யானையோடு போரிடும் என்பதும் இப்பாடல் தெரிவிக்கின்றது. மற்றுமோர் பாடலில் "குன்றிலிடைக் களிறுளி கொள்ளக்குறத்திகள், முன்றிலிடைப் பிடிகன்றிடும் முதுகுன்று" என்றார். 'கொள்ள' என்ற சொல் இடரைத் தருகின்றது. திரு. அ. சோமசுந்தரம் செட்டியார் 'கொள்ள' என்ற சொற்குக் 'கொல்ல' எனப் பொருள் செய்தார். அது எவ்வாறு பொருந்துமோ தெரியவில்லை. 'கொல்ல' என்ற பாடத்தையே கொண்டால் தவறுளதோ! குன்றில் களிற்றினை யாளி கொன்றதால் குறவர் வாயிலில் உள்ள பிடி வருந்தின என்கிறார்.

காட்டு யானைகளைப்பற்றிக் கேதாரப்பதிகத்தில் மிக விரிவாகப் பாடுகிறார். "கம்பக்களிற்றினமாய் சுனைநீர்களைத்தூவி செம்பொற்பொடி சிந்தும்...கேதாரம்" (78) என்று களிறும் பிடியுமாய்க் களித்து வாழ்வதை எடுத்து இயம்பினார். பின்னும் அவைகளின் வாழ்க்கையை "முளைக்கைப்பிடி முகமன் சொலி முதுவேய்களை யிறுத்து, துணைக்கைக் களிற்றினமாய் நின்று சுனைநீர்களைத் தூவி, விளைக்கைப் பொழிமழை கூர்தர மயின் மான்பிணை நிலத்தைக் கிளைக்க மணி சிந்தும்" (78) என்றும், "மலைச்சாரலும் பொழிற்சாரலும் புறமேவரு மினங்கண, மலைப்பாற் கொணர்ந் திடித்தூட்டிட மலங்கித்தன களிற்றை அழைத்தோடியும் பிளிறியவை யலமந்து வந்தெய்த்துத் திகைத்தோடித்தன் பிடிதேடிடும் சீபர்ப்பத மலை" (79) என்றும் விவரித்தார். பின்னும் யானைகள் துன்புற்ற போது வேடர்கள் அவைகளுக்கு இரங்கி அவைகளை உண்பிப்பதை "ஆனைக்குலமிரிந் தோடித்தன்பிடி சூழலிற் றிரியத், தானப்பிடிசெவி தாழ்த்திட அதற்கு மிகஇரங்கி, மானக்குறஅடல் வேடர்களிலையாற் கலைகோலித், தேனைப்பிழிந்தினி தூட்டிடுஞ் சீபர்ப்பதமலை" என்றனர். யானைகளிடையே காணப்படுமுடலை "மாற்றுக் களிறடைந்தாயென்று மதவேழங்

கையெடுத்து, மூற்றிக் கனலுமிழ்ந்து மதம்பொழிந்தும் முகஞ்சுழியத், தூற்றத் தரிக்கில்லேன் என்று சொல்லி யயலறியத், தேற்றிச் சென்றுபிடி சூழலுறுஞ் சீபர்ப்பதமலையே" என்ற பாடலில் காட்டியுள்ளார். திருக்கழுக்குன்றிலும் பண்டைநாளில் யானைகள் தன்விருப்பாய்த் திரிந்துகொண்டிருந்தன எனத்தெரிகிறது. இதனை 81-ம் பதிகத்தில் "பிளிறுதீரப் பெருங்கைப் பெய்ம்மத மூன்றுடைக் களிறிேனாடு பிடிசூழ்தண் கழுக்குன்றமே" என்றும் பாடினார். களிறும் பிடியும் ஒன்றாகவாழ்ந்து கன்றுகளை யீன்று மகிழ்ச்சியாகத் திரிந்தன என்பது தெரிகிறது. கழுக்குன்றில் முன்னாளில் யானைகள் வாழ்தற்கிடமான பெருங்காடு இருந்தது போலும்.

8. பல திருவிடங்களிலும் குரங்குகள் காணப்பட்டன. இராமன் வரலாறு தென்னாட்டில் பரவப்பரவ குரங்குகளின் தெய்வத்தன்மை மிகுதிபட்டது போலும். மக்களில் ஒரு சாரார் அவைகளைக் கடவுளின் வேறாக்காது வணங்கினார்கள். பலவிடங்களில் கோயில்களில் வடிவங்களை அமைத்தும் வணங்கினர். உயிர்க்குரங்குகள் கோவில்கண்ட விடங்களில் கூட்டங் கூட்டமாக வாழத்தொடங்கின. அங்கு செல்லும் மக்கள் கடலையும் பழமும் அவைகளுக்கு உண்ணத் தந்தார்கள். அவைகளைப்பற்றி ஆரூரர் பல பாடல்களில் குறிப்புச் செய்திருக்கின்றார். திருப்பனையூரில் (87) "மரங்கண்மேல் மயிலால மண்டப மாடமாளிகை கோபுரத்தின்மேல், திரங்கல்வண்முகவன் புகப்பாய் திருப்பனையூர்" என்றவிடத்தில் குரங்கு பேசப்பட்டது. குரங்கின் கோணமுகமே அதற்குச் சிறப்புடையது. அதையும் அதன் இயற்கையாயுள்ள பாயுந் தன்மையையும் குறித்திட்டார். ஆகையால் குதித்தாடுவதை

"குரக்கினங் குதிகொள்ளத் தேனுகக் குணருதண்வயற் கெண்டை பாய்தரப் பறக்குந்தண் கழனி பழனத் திருப் பனையூர்" என்றும், "மந்திபல மாநட மாடுந்துறையூர்" என்றும், 92-ல் "குரங்காடு சோலைக் கோயில்கொண்ட குழைக்காதனே" என்றும் பாடினர். மற்றொரு பதிகத் தில் "மந்திகடுவனுக் குணப்பழ நாடிமலைப்புறம் சந் திகடோறும் சலபுட்பமிட்டு வழிபட" என்று அவைகளில் ஆண்குரங்கு பெண் குரங்குக்காகப் பழம் கொண்டுவரச் செல்லுங் காட்சியும் நீரும் பூவும் கொண்டு அவைகள் வழி படுங் காட்சியும் விந்தையை விளக்கும். மற்றுமோர் பாடலில் (43) "மந்திகடுவனுக்கு உண்பழநாடி மலைப்புறம், முந்தியடி தொழ நின்ற சீர்முது குன்றரே" என தெய்வத்தை மந்தி கள் தொழுது பின் தம் பெண்டிர்க்காகப் பழத்தைத் தேடிச் செல்லும் என்று தெரிவிக்கிறார். திருக்கோலக்காவில் (62) குரக்கினங் குதிகொண்டு வயல்கள் சூழ்கோலக்கா" எனக் குரங்குகளின் மலிவைக் குறித்தார். திருக்கழுக்குன்றத்தில் இன்று போல் அன்றும் குரங்குகள் இருந்தன என்பதை (81) "மூலகளுண்டு தழுவிக் குட்டியொடு முசுக்கலைகள் பாயும் திருக்கழுக்குன்றம்" என்றனர்.

9. பலவேறு விலங்குகளையும் ஆங்காங்கு குறிக்கின் றார். 76ல் "தொறு விலானிள வேறு துண்ணென இடிகுரல் வெருவி, செறுவில் வாளைகளோடச் செங்கயல் பங்கயத் தொதுங்க, கறுவிலா மனத்தார் காண்டரு வாஞ்சியம்" என்ற பாடலில் எருதுகளின் முக்காரத்தைக் குறித்தனர். சீபர்ப் பதத்தினில் (79) "மானு மரையினமும் மயிலினமும் கலந் தெங்கும், தாமே மிகமேய்ந்து தடஞ்சுனை நீர்களைப் பருகி, பூமா மரமுரிஞ்சிப் பொழிலூடே சென்று, தேமாம்

பொழில் நீழற்றுயிலும்" என்றனர். சிவபெருமான் ஊரும் விடையையும் பலவிடங்களில் அழகாக எடுத்துரைப்பார். 68ல் "நீரை விடையுடை நள்ளாறனே" என்று அதன் தூய வெண்ணிறத்தைப் புகழ்ந்தார். தாம் கைலைக் கேகுதற்கு இறைவனால் தரப்பட்ட யானையை 'வெஞ்சினயானை' என்றும் 'சிரமலி யானை' என்றும் 'மத்தயானை' என்றும் பேசுகிறார். அதன்மேல் ஏறிச்சென்றபோது அதன் விசையை 'நிலைகெட விண்ணதிர நிலமெங்கும் அதிர்ந்தசைய' யானையேறிச் சென்றதாகப்பாடினர்.

10. பன்றிகளும் கரடிகளும் காடுகளில் காணப்பட்டன. இதனை 79-ம் பதிகத்தில் "ஏனத்திரள் கிளைக்க வெரிபோல் மணிசிதர்த்தி, ஏனல்லவை மலைச்சாரலிற்றிரியுங் கரடியும், மானும் மரையினமும் மயின் மற்றும் பலவெல்லாம், தேனுண் பொழில்சோலை மிகுசீ பர்ப்பதமலை" என்னும் பாடலில் கண்டார். 50-ல் "கொள்ளிவாயின கூரெயிற்றேனங் கிழிக்கவே, தெள்ளிமாமணி தீவிழிக்குமிடம்" திருப்புனவாயில் எனப் பன்றிகள் தம்கொம்பால் நிலத்தைக்கிளர மணிகள் ஒளிக்கும்.

11. இனிக் குளங்களில் காணப்படும் அன்னம் முதலியவைகளைப் பற்றியும் சில குறிப்புக்கள் காணப்படுகின்றன. காறைட்டுமுள்ளூரில் (40) "அரும்புயர்ந்த அரவிந்தத் தனி மலர்கள் ஏறி, அன்னங்கள் விளையாடு மகன்றுறையி னருகே" என்றனர். தாமரை மலர்கள்மேல் அன்னங்கள் ஏறி விளையாடுமாம். ஓரிடத்தில் அன்னஞ்சேர் வயல்சூழ்பைஞ்ஞீலி" என்றார். திருநாரையூர்ப் பதிகத்தில் (99) "பங்கயமா மலர்மேல் மதுவுண்டு வண்டேன் முரல, செங்கயல்பால் வயல்சூழ் திருநாரையூர்" என்று ஆங்கு கயல்மீன்கள் பாய்வதைக் குறித்

தார். மீண்டும் அதே பதிகத்தில் "கோலமலர்க் குவளைக் கழுநீர் வயல் சூழ்கிடங்கில் சேலொடுவாளைகள் பாய்திருநாகேச்சுரத்தான்" எனச் சேல்மீனும், வாளைகளும் வயலைச் சூழ்ந்த கிடங்குகளிலும் காணப்பட்டன. இப்படியே திருவாஞ்சியத்தில் (76) "தொறுவிலா னிளவேறு துண்ணென இடிகுரல் வெருவிச், செறுவில் வாளைகளோடச் செங்கயல் பங்கயத் தொதுங்க" என்று பாடிய பாடலில் வயல்களிலும் வாளைகள் ஓடின என்றும் அதனைக் கண்டு செந்நிறமுடைய கயல்மீன்கள் தாமரையிலையின்கீழ் ஒதுங்கித் தம்மைப் பாதுகாத்தன வெனவும் தெரிகிறது.

திருப்பனையூரில் (87) "செங்கண்மேதிகள் சேடெறிந்து தடம்படிதலின் சேலினத்தொடு, பைங்கண் வாளைகள்பாய் பழனத்தையும்", "வாளைபாய மலங்கினங் கயல்வரிவாலுகளுங் கழனியையும்" உடையதெனச் சொல்கிறார். பலவகை மீன்களும் நீர் நிலைகளிலும் வயல்களிலும் நிறைந்திருந்தன எனத் தெரிகிறது. மற்றோரிடத்தில் "வாவியிற் கயல்பாய குளத்திடை மடைதோறும்...மேவிய குருகாவூர்" (29)என்று கயல் மீன்கள் பாய்வதைப்பற்றிப் பாடினார். திருவடமுல்லை வாயிலில் (69) வயலிலுள்ள தாமரைமேல் நண்டுகள் உறங்கும் காட்சியை "பொன்னலங்கழனிப் புதுவிரை மருவிப் பொறி வண்டுவரிவண்டிசை பாட, அந்நலங்கமலத் தவிசின்மேலுறங்கும் அலவன்வந் துலவிட வள்ளல் செந்நலங்கழனி" என வரைந்தார்.

## சமாஜ கோடைகால விடுமுறை

சமாஜ காரியாலயத்துக்கு வழக்கம்போல் 10-5-42 முதல் 25-7-42 வரை கோடைகால விடுமுறை நாட்களாகும். ஷை தேதிக்குமேல் காரியாலயம் திறக்கப்படும்.

### வல்லை - சண்முகசுந்தர முதலியார் பிரிவு

இவர், பூவை - கலியாணசுந்தர யதீந்திரரின் முதல் மாணவர்; பழைய சைவர்; மருத்துவத்தில் கைதேர்ந்தவர்; சோதிடம் வல்லவர்; அரசாங்க இந்திய மருத்துவக் கல்லூரியில் ஆசிரியராகவும் மருத்துவராகவும் இருந்தவர்; வல்லை - பாலசுப்பிரமணிய முதலியாரின் தந்தையார்; திரு. பூ. சமரபுரி முதலியாரின் மாமனார். இவர் தம் குடும்பத்தினர் கல்வியறிவும் சமயப் பற்றும் தமிழ்ப்பற்றும் உடையவராகச் செய்த பெருமை முதலியாருக்குரியது. இப்பெரியார் 5-5-42ல் இளம்பூரணன் இணையடி சேர்ந்தார். இவருக்கு வயது 84. இவரது ஆன்மா சாந்தியடைவதாக.

---


வெளிவந்துவிட்டது! வெளிவந்துவிட்டது!!

# திருப்போரூர்ச் சந்நிதிமுறை

ஸ்ரீலஸ்ரீ சிதம்பர சுவாமிகள் அருளிச்செய்த திருப்போரூர்ச் சந்நிதிமுறையும் திருப்பாதிரிப்புலியூர் ஸ்ரீலஸ்ரீ ஞானியார் சுவாமிகள் அருளிச்செய்த அரும்பதவுரையும் குறிப்பும் நமது சமாஜத்தின் அடக்கவிலைச் சுத்தப் பதிப்பாகச் "சித்தாந்தம்" ஆசிரியர் திரு. வி. உலகநாத முதலியாரவர்களுடைய 60-வது ஆண்டு நிறைவு நன்னாளன்று திருப்போரூர் முருகப்பெருமான் சந்நிதியில் வெளியிடப்பட்டது. 272 பக்கங்கொண்ட பெரிய நூல். நல்ல கிளேஸ் காகிதத்தில் அச்சிடப்பெற்று முழுகலிக்கோ பைண்டு செய்யப்பெற்ற தனிப்பிரதி விலை அணா 10. 8 பிரதிகள் விலை ரூ. 4½. தபாற்கூலி வேறு. உடனே முன்பணமனுப்பிப் பிரதிகளைப் பெறுக.

Registered No. 2330. "SIDDHANTHAM" Vol. 15. No. 5

# சமாஜ வெளியீடுகள்

# CATALOGUE OF SAMAJAM BOOKS

| | | ரூ. | அ. |
|---|---|---|---|
| அப்பர் தேவாரம் | ... | 1 | 0 |
| சுந்தரர் தேவாரம்—குறிப்புரையுடன் | .... | 0 | 12 |
| திருவாசகம் ,, | .... | 0 | 10 |
| ,, (பல ஆராய்ச்சி அகராதிகளுடன்) | .... | 0 | 12 |
| திருவாசகம் மூலம் | ... | 0 | 2½ |
| திருக்கோவையார், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு—குறிப்புரையுடன் | .... | 0 | 9 |
| அ, கூ திருமுறைகள் ,, | .... | 1 | 2 |
| திருமந்திரம் — (இரண்டாம் பதிப்பு) | .... | 1 | 0 |
| பதினோராந் திருமுறை ,, | .... | 0 | 11 |
| பெரியபுராணம் ,, | .... | 1 | 6 |
| மெய்கண்டாரும் சிவஞான போதமும் | .... | 0 | 8 |
| சங்கநூற்புலவரகராதி | .... | 0 | 1 |
| தலயாத்திரைப் படம் | .... | 0 | 1 |
| திருப்புகழ் (அருணகிரியார் அருளியவை முற்றும்) | | 3 | 0 |
| திருப்போரூர்ச் சந்நிதிமுறை | ... | 0 | 10 |
| சீவக சிந்தாமணி | .... | 1 | 8 |
| சிவஞானபாடியம் | .... | 1 | 0 |
| சிவஞானபோதச் சிற்றுரை | .... | 0 | 8 |
| சிவஞான சித்தியார் உரை | .... | 0 | 12 |
| சிவப்பிரகாசம் மூலமும் உரையும் | .... | 1 | 0 |
| சித்தாந்த அஷ்டகம் | .... | 1 | 0 |
| சித்தாந்த சாத்திரம் மூலமும் உரையும் | .... | 3 | 0 |

தபாற்கூலி, பார்சல் செலவு முதலியன வாங்குவோர் செலுத்த வேண்டும். முன்பணம் அனுப்புக.

**சைவ சித்தாந்த மகா சமாஜம்**

22-A, கல்லுக்காரத் தெரு, மயிலாப்பூர், சென்னை

Printed at the Sadhu Press, 12, Ganapathi Mudali Street, Royapettah, by T. V. Volaganathan (Publisher) for the Saiva Siddhanta Maha Samajam, at "Thiruvarulagam", 22-A, Kallukaran Street, Mylapore, Madras.